ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,868—1969 අගෝස්තු 22 වැනි සිකුරාදා—1969.8.22

14,868 ம் இலக்கம்—1969 ம் ஆண்டு ஒகத்து மாதம் 22 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (III)—வியாபார உரிமை அடையாளங்களும் ஆக்க உரிமை விளம்பரங்களும்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் | 169 | அலங்காரச் சித்திரச்சட்ட விளம்பரங்கள் | — |
| வியாபார உரிமை அடையாள அறிவிப்பு | — | வடிவ அமைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் | — |
| ஆக்க உரிமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் | — | பலவினமானவை | — |


## வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்

### வியாபார உரிமை அடையாள அலுவலகம்

வியாபார உரிமை அடையாளம் சம்பந்தமான சகல கடிதங்களும் வியாபார உரிமை அடையாளப் பகுதிப் பதிவாளர், கம்பெனிகள் பதிவாளர் அலுவலகம், தட்டடம் 5, எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

### பரிசோதனைக்குரிய நேரம்

அரசாங்க விடுமுறை தவிர்ந்த ஒவ்வொரு கிழமை நாட்களிலும் 10 மணி தொடக்கம் 4 மணிவரையிலும், போயா தினத்திற்கு முந்திய நாட்களில் 10 மணி தொடக்கம் 1 மணிவரையிலும் அலுவலகம் பொதுசனங்களின் அலுவலுக்குத் திறந்திருக்கும்.

எனினும், பரிசோதனைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் கிழமை நாட்களில் மாலை 3 மணிவரையிலும், போயா தினத்துக்கு முந்திய நாட்களில் மத்தியானம் 12 மணி வரையிலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

### நிறங்களை வரையறுக்கும் வியாபார உரிமை அடையாளங்கள்

ஒரு வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படும் பொழுது, அது குறிப்பிட்ட நிறங்களுக்கு வரையறுக்கப்பட்டதென்று விண்ணப்பப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தால், அந்த நிறங்கள் கூடுமானவரை வழக்கமான கட்டியம் சார்ந்த முறையில் இத்துடனுள்ள அடையாளச் சின்னத்தில் காட்டப்படும்.

### கூட்டுச் சேர்க்கை

150 ம் அதிகார வியாபார அடையாளச் சட்டத்தின் 23 ம் பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒரு அடையாளம் இன்னொரு வியாபார அடையாளத்துடன் கூட்டுச் சேர்க்கப் படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அது அதன் உத்தியோக எண்ணினால் காட்டப்படும்.

### "அ" அல்லது "ஆ" பகுதியின் கீழ் விண்ணப்பம்

பதிவேட்டின் "அ" பகுதியின் கீழ் வரும் விண்ணப்பங்கள் வேறு யாதும் எழுத்தின்றி உத்தியோக எண் மூலமாகவே காட்டப்படும். பதிவேட்டின் "ஆ" பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங்கள் உத்தியோக எண்ணுக்கு முன் "ஆ" என்ற எழுத்தால் தெளிவாகக் காட்டப்படும்.

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

*எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

*அரசாங்க அச்சகப் பகுதி,*
*கொழும்பு,*
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*பதில் அரசாங்க அழுத்தகன்.*

## எதிர்ப்பு

பின்வரும் வியாபார அடையாளங்கள் பதிவு செய்வதை யாராயினும் எதிர்க்கக் காரணங்கள் இருந்தால் இந்த வர்த்தகப் பத்திரிகைத் தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள் அழிக்கப்படாத அல்லது படிவு செய்த 25 ரூபா பெறுமதியான முத்திரையுடன் ரீ. எம். 7 பத்திரத்தில் எதிர்ப்பு அறிவித்தலைச் சமர்ப்பிக்க வேண்டும். பதிவாளர் தகுதியானதெனக் கருதினல், அவர் விதிக்கும் நிபந்தனைகளுடன் எதிர்ப்புத் தெரிவிக்கும் கால எல்லை நீடிக்கப்படலாம். பதிவு கோரும் விண்ணப்பகாரர் தனது விண்ணப்பத்தை மீளப்பெறுவதற்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் முகமாக, முறைப்படியான அறிவித்தல் எதிர்ப்பு விண்ணப்பம் தயாரிப்பதற்கு வேண்டிய செலவைச் செய்யுமுன், அவருக்குக் கடிதமூலம் நியாயமான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். எதிர்ப்பவர் அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கத் தவறின், விண்ணப்பகாரர் எதிர்ப்பை எதிர்த்து வாதிடாதவிடத்து, எதிர்ப்பவரின் செலவு கோரும் மனு பரிசீலனை செய்யப்படும்போது அது கவனத்துக்கெடுக்கப்படும்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.